**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-2 | Date | : 13.02.2026 |
| Case No. | : **O.S.** 166/2019 | Nationality | : Indian |
| Name | : அழகர் | Religion | : |
| Father's/Husband's Name | : சாமிநாதன் | Age | : 42 |
| Village | :அம்மன்பேட்டை, வேப்பத்தூர்-1 | | |
| Taluk | : திருவிடைமருதூர் | | |

<u>பி.சா.2</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

<u>**முதல் விசாரணை :-**</u>

நான் வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 08.10.1993 நாங்கள் குடியிருந்து வரும் பட்டா எண்.128 க்கு உட்பட்ட பழைய சர்வே எண்.130/14 புதிய புல எண்.130/44, 0.01.50 ஏர்ஸ்க்கு எங்கள் தந்தை சாமிநாதன் பெயரில் உள்ள பட்டா அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.01.2010 எங்கள் தந்தை சாமிநாதனின் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.03.2010 எங்கள் தந்தை சாமிநாதனின் வாரிசு சான்று அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1920-2017 வரையிலான 1வது இனச் சொத்தான புல எண்.130/16 க்கு எவ்வித கிரய ஆவணங்களும் இல்லை என்பது குறித்த திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலக வில்லங்க சான்றிதழ்கள் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.06.2022 எங்களுடைய அனுபவத்தில் இருந்து வரும் புல எண்.130/16 சரிபாதி 0.01.25 ஏர்ஸில் எங்கள் தாயார் சுப்புலெட்சுமி பெயரில் அரசு திட்டத்தில் கழிவறை

கட்டியதற்கான வழங்கப்பட்ட மானியத்தொகை வரவு வைக்கப்பட்டதற்கான சிட்டி யூனியன் வங்கி பாஸ்புக் அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கை தள்ளுபடி செய்ய கேட்டுக் கொள்கிறேன். (**வாசாஆ 1** ஆவணம் வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்ற வாதி தரப்பு வழக்கறிஞரின் கடுமையான ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).